ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

බැංකු නොවන මූල්‍ය ආයතන අධීක්ෂණ දෙපාර්තමේන්තුව
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
DEPARTMENT OF SUPERVISION OF NON-BANK FINANCIAL INSTITUTIONS

අංක 30, ජනාධිපති මාවත, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01, இலங்கை
No. 30, Janadhipathi Mawatha, Colombo 01, Sri Lanka

தொடர்பு :24/10/001/0019/005

2022 நவெம்பர் 29

முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

கனம் ஐயா/அம்மணி

**நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்கள்**

அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் ஏற்புடைய ‘நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்களை’ இத்துடன் இணைத்துள்ளோம்.

2019இல் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான வழிகாட்டலுக்கமைவாக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகளை வசதிப்படுத்தும் நோக்குடன், நிலைபெறத்தக்க பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தையும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகளுக்காக ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பை வழங்குவதற்கான தேவையையும் கருத்திற்கொண்டு இவ்வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்மூலம், அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் இணைக்கப்பட்ட வழிகாட்டல்களை அனைத்து தொடர்புடைய அலுவலர்களுக்கும் தொடர்பூட்டுவதற்கும் வழிகாட்டலில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவைப்படுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள,

**(திருமதி) ஆர் எம் சி எச் கே ஜயசிங்க**

பணிப்பாளர்

*இணைப்பு:* நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்கள்

## நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டல்கள்

### 1. அறிமுகம்

1.1. ஐக்கிய நாடுகளால் நிர்ணயிக்கப்பட்ட நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு அர்ப்பணிக்கவேண்டிய முக்கியத்துவத்தையும் பசுமை, வசதிக்குட்படுத்தல் மற்றும் சமநிலையான பொருளாதாரம் என்பவற்றை நோக்கி இலங்கை மாறுதலடைவதற்கான தேவைப்பாட்டையும் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கி நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான வழிகாட்டலை 2019.04.10 அன்று வெளியிட்டது. நிதியியல் நிறுவனங்கள் நிதியளிக்கின்ற கருத்திட்டங்களுடன் இணைந்த சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை காத்திரமாக முகாமைசெய்வதற்கும் பசுமையானதும், காலநிலை சிநேகமிக்கதானதும் சமூக ரீதியான வசதிக்குட்படுத்துவதற்குமான வியாபாரங்களுக்கு உதவிபுரியும் பொருட்டும் அத்தகைய நிறுவனங்களுக்கு பரந்தவொரு பணிப்புரையொன்றினை இவ்வழிகாட்டல் வழங்குகின்றது.

1.2. மேலும், இலங்கையில் நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுக்கான வகைப்படுத்தலையும் அளவீட்டு முறைமையையும் நிறுவி இலங்கை மத்திய வங்கி இலங்கையின் பசுமை நிதி பகுப்பியலை 2022.05.06 அன்று வெளியிட்டது.

### 2. வழிகாட்டல்களின் குறிக்கோள்கள்

2.1. வழிகாட்டலுடன் இசைந்துசெல்லும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி முன்முயற்சிகளுக்கு வசதியளிக்கும் நோக்குடன் நிலைபெறத்தக்க பொருளாதாரத்தின் முக்கியத்துவம் பற்றியும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகளுக்கு ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு என்பவற்றை வழங்குவதற்கான தேவைப்பாடு பற்றியும் கருத்திற்கொண்டு இத்தகைய வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

### 3. ஏற்புடைமை

3.1. இவ்வழிகாட்டல்கள் அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் ஏற்புடையாதல் வேண்டும்.

### 4. வழிகாட்டலை நடைமுறைப்படுத்தி வங்கியல்லா நிதியியல் நிறுவனத்தின் மேற்பார்வை பணிப்பாளருக்கு (பணிப்பாளர்) அறிக்கையிடுதல்.

4.1. வழிகாட்டலை நடைமுறைப்படுத்தி அவற்றின் பின்வரும் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள அல்லது திருத்தப்பட்டவாறான காலப்பகுதிகளை நடைமுறைப்படுத்துமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கோரப்படுகின்றன.

4.2. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 15ஆம் பிரிவால் பணிப்பாளருக்கு உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் பணிப்பாளரால் பணிக்கப்பட்டவாறு தமது நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகள் மீது பணிப்பாளரால் குறித்துரைக்கப்பட்டவாறான விதத்தில், அத்தகைய படிவத்தில் அல்லது

அத்தகைய காலஇடைவெளிகளில், அத்தகைய காலங்களில் தகவல்களை அல்லது ஆவணங்களைச் சமா்ப்பிக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கோரப்படுகின்றன.

**5. நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுக்காக இனங்காணப்பட்ட முன்னுரிமைத் துறைகள்**

5.1. நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுக்காக பின்வரும் முன்னுரிமை துறைகளை பகுப்பியல் அடையாளம் காண்கின்றது:

அ) காடாக்கல் மற்றும் மரக்குற்றியாக்கல்;

ஆ) வேளாண்மை;

இ) தயாரித்தல்;

ஈ) மின்வலு சக்தி உருவாக்கம், கடத்தல் மற்றும் விநியோகம் ;

உ) நீர் வழங்கல், கழிவு நீர் மற்றும் கழிவு முகாமைத்துவம்;

ஊ) கட்டுமானம்;

எ) போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்;

ஏ) சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு;

ஐ) தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம்;

ஒ) நிதியியல் பணிகள் (வேளாண்மை மற்றும் சுற்றுலா நடவடிக்கைகள் காலநிலையிலிருந்து தாக்குபிடிக்கும்தன்மையை அதிகரிப்பதற்கு வசதியான காப்புறுதி உற்பத்திகள் வழங்குவதை வசதியளித்தல்); மற்றும்

ஓ) எரிவாயு, நீராவி, மற்றும் குளிரூட்டல் வழங்கல், நிலக்கீழ் நிரந்தர காபனீரொட்சைட்டு புவிச்சரிதவியல் களஞ்சியம், ஐதரசன் களஞ்சியம்.

5.2 நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் தொடா்பில் நிதிகளை வழங்கும் போதும் அறிக்கையிடும் போதும் மேற்குறித்த முன்னுரிமையளிக்கப்பட்ட பிரிவுகளுக்கு மேலதிகமாக அவற்றுடன் தொடா்புடைய நடவடிக்கைகளை இனங்கண்டு வகைப்படுத்துவதற்கு பகுப்பியலைப் பயன்படுத்துமாறு உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்படுகின்றன.

5.3 நிலைபெறத்தக்க குத்தகைக்குவிடும் சாதனங்கள் உட்பட சேமிப்பு உற்பத்திகளையும் நிலைபெறத்தக்க கடன் உற்பத்திகளையும் உருவாக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

5.4 வேண்டப்பட்டவாறு, பசுமையானதும் சமூக ரீதியாக வசதிக்குட்பட்டதுமான கருத்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் வழிகாட்டல் மற்றும் தொழிற்பாட்டு கருவிகளை வழங்குவதற்கும் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

**6. நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகள்/ முன்முயற்சிகளுக்கான ஆளுகைக் கட்டமைப்பு**

6.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்கவாறும் செயற்றிறன்வாய்ந்தும் மேற்பார்வை செய்வதற்கு பணிப்பாளர் சபை ஊக்குவிக்கப்படுகின்றனர்.

6.2 குறைந்தபட்சமாக பின்வருவனவற்றை உள்ளடக்கி பணிப்பாளர் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட நிலைபெறத்தக்க நிதியியல் கொள்கையொன்றை உருவாக்குவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

அ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துகின்ற பணிப்பாளர் சபையினதும் மூத்த முகாமைத்துவத்தினதும் தெளிவான வகிபாகங்கள் மற்றும் பொறுப்பாண்மைகள்;

ஆ) சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளையும் நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளையும் அடையாளங்கண்டு முகாமைசெய்தல்; அத்துடன்

இ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பிரமாணங்கள் மற்றும் அளவுருக்கள்

6.3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலரும் தொடர்புடைய முக்கிய பொறுப்புடைய ஆட்களும் பணிப்பாளர் சபையால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் கீழ், பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கு வேண்டப்படுகின்றனர் :

அ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகள் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகள், கருவிகள், அளவுருக்கள், தொழிற்பாட்டு நடைமுறைகள், மற்றும் கட்டுப்பாடுகள் என்பன மீளாய்வுசெய்யப்பட்டு ஆகக்குறைந்தது ஆண்டுதோறும் இற்றைப்படுத்தப்படுவதுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் ஏனைய வேறு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

ஆ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி முகாமைத்துவம்செய்வதற்கு போதுமானளவு வளங்கள், திறன்கள் மற்றும் நிபுணத்துவம் என்பன ஒதுக்கீடுசெய்யப்படுதல்

இ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வுகளை முகாமைசெய்வதில் வியாபார பிரிவுகளினதும் தொழிற்பாடுகளினதும் வகிபாகங்களினதும் பொறுப்பாண்மைகளினதும் தெளிவாக எடுத்துரைத்தல் மற்றும்

ஈ) நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய முன்னேற்றம் மற்றும் முக்கிய பிரச்சினைகள் பற்றி உரிய காலத்தில் பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல்.

## 7. இடர்நேர்வு முகாமைத்துவம்

7.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அவற்றின் தொழிற்பாடுகளின் தன்மை, அளவு, சிக்கல்வாய்ந்ததன்மை மற்றும் இடைத்தொடர்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு, சுற்றுச்சூழல் சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளையும் நிலைபெறத்தக்க வியாபார நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளையும் அடையாளங்கண்டு மதிப்பிடுவதற்கும் அத்தகைய இடர்நேர்வுகளின் பரிமாணம் மற்றும் முக்கியத்துவம் என்பவற்றை கணிப்பிடுவதற்கும் வேண்டப்படுகின்றன.

7.2 அடையாளங்காணப்பட்ட சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பில் கூட்டிணைக்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

7.3 அடையாளங்காணப்பட்ட இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவ நடத்தைகளையும் உள்ளக கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஒட்டுமொத்த தீர்மானமெடுத்தல் செயன்முறையில் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை கூட்டிணைப்பதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

## 8. இயலாற்றலைக் கட்டியெழுப்புதலும் புத்தாக்கமும்

8.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பின்வருவனவற்றிற்கு ஊக்குவிக்கப்படுகின்றன;

அ) உள்ளக மற்றும் வெளிவாரி பயிற்சிகளினூடாக தமது ஊழியர்களின் சுற்றுச்சூழல், சமூக, ஆளுகை இடர்நேர்வு முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்துதல்.

ஆ) நிலைபெறத்தக்க நிதியியலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான உள்ளக நிபுணத்துவத்தை உருவாக்குதல் அல்லது அத்தகைய நடைமுறைப்படுத்தலுக்கு பொருத்தமானவாறு நிலைபெறத்தக்க நிதியியல் நிபுணரை/நிபுணர்களை சேர்த்துக்கொள்ளல்; அத்துடன்

இ) சுற்றுச்சூழல் அழுத்த சோதனைகளிலும் சூழ்நிலைப் பகுப்பாய்வுகளிலும் நிபுணத்துவத்தை உருவாக்குதல்.

## 9. வெளிப்படுத்துகையும் அறிக்கையிடுதலும்

9.1 உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் அவற்றின் ஆண்டறிக்கைகளில் நிலைபெறத்தக்க நிதியியல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பின்வரும் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு வேண்டப்படுகின்றன;

அ) நிலைபெறத்தக்க நிதி கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய பொதுநோக்கு;

ஆ) அடையாளங்காணப்பட்ட சுற்றுச்சூழல், சமூக, ஆளுகை மற்றும் நிலைபெறத்தக்க நிதியுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளும் அவற்றுடன் இணையப்பெற்ற தணிப்பு வழிமுறைகளும்;

இ) நடப்பில் முன்மொழியப்பட்டதுமான முதலீடுகள் மற்றும் வியாபார நடவடிக்கைகளின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கம்

ஈ) வழிகாட்டலை நடைமுறைப்படுத்தல் மற்றும் அடுத்த ஆண்டிற்கான செயற்றிட்டம் உள்ளடங்கலாக நிலைபெறத்தக்க நிதியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஏற்பட்ட முன்னேற்றம்.

உ) நிலைபெறத்தக்க நிதியங்களுக்காக திரட்டப்பட்ட நிதியங்களினதும் நிலைபெறத்தக்க நிதியத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியங்களினதும் மொத்த மற்றும் ஆண்டுத் தொகைகள்.

9.2 உலகளாவிய அறிக்கையிடும் முன்முயற்சி மற்றும் காலநிலை தொடர்புட்ட நிதியியல் வெளிப்படுத்துகை மீதான செயலணியின் விதந்துரைப்பு போன்ற பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையிடும் கட்டமைப்புக்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கத்தை வெளிபடுத்துமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.